



# துயரங்களுக்கு ஒரு தூரிகை!





தஞ்சாவூரைச் சேர்ந்த புகழேந்தியின் ஓவியப் படைப்புகள் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. இவரது செதுக்கோவியங்கள் சூழலியல் பிரச்னைகளைப் பேசுபவை. குடந்தை ஓவியக் கல்லூரி நாட்களில் செய்த ஓவியங்கள் ஈழப் பிரச்னை பற்றி பேசுபவை. நுண்கலையில் முதுகலைப் பட்டப் படிப்புக்காக ஹைதராபாத் சென்ற பிறகு செய்த ஓவியங்கள் மதக் கலவரங்கள் குறித்துப் பேசுபவை.

உண்மையில் புகழேந்தியின் ஓவியங்கள், நவீன ஓவியத்தில் மக்கள் அக்கறை எடுத்துக்கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. உதாரணமாக, இன்று பாபர் மசூதி – ராமர் கோயில் பிரச்னை நாட்டைப் பெரும் குழப்பத்துக்கு ஆளாக்கி இருக்கிறது. மனசாட்சி உள்ள அனைவரையும் பாபர் மசூதியின் இடிபாடு சங்கடத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. இதேவகையான சங்கடம், ஓவியர் புகழேந்தியையும் எதிர்கொள்கிறது. அவரது தூரிகை இந்த அவலத்தை ஓர் ஓவியமாகப் படைக்கிறது. மதச் சின்னங்களாலோ, ஆடைகளின் வகைகளினாலோ இன்னமதம் என்று முடிவு செய்ய முடியாத நிர்வாண உருவம் ஒன்று இறந்துகிடக்கிறது. அதற்குப் பக்கத்தில் குருதி தோய்ந்த கத்தியுடன் மத அடையாளம் சொல்ல முடியாத இன்னொரு உருவமும் தீட்டப்பட்டுள்ளது. தூரத்தில் மசூதியின் கலசம், கோயிலின் கோபுரம் உள்ளன. மதக் கலவரங்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஓவியர் ஓர் ஓவியமாகத் தீட்டி இருக்கிறார்.

''சமுதாயத்தில் நான் ஒரு மனிதனாக மட்டுமல்லாது ஓவியனாகவும் இருப்பதால் என்னுடைய ஓவியங்களின் மூலம் மக்களின் அவலங்களை வெளிப்படுத்த விரும்புகிறேன்'' என்று வெளிப்படையாகத் தெரிவிக்கிறார் புகழேந்தி.

பல நேரங்களில் புகழேந்தியின் ஓவியங்கள் சமூகப் பிரச்னைகளை நேரடியாகப் பேசுவதில்லை. இவை கலை ரீதியான ஒரு குறியீட்டு மொழியில் அமைந்து விடுகின்றன.

குறிப்பாக, அவரது 'துயரம்' எனும் ஓவிய வரிசையை எடுத்துக்கொண்டால், – அதில் வேதனையினால் திணறும் மனித உருவங்கள் கலைநேர்த்தியுடன் தீட்டப்பட்டுக் காட்டப்படுகின்றன. நிர்வாண உருவங்கள், உடல்களின் கைவிரல்கள், பாதங்கள் போன்ற பகுதிகள் ஆகியவை தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டவையாக கித்தானில் காட்சி தருகின்றன. இந்த வரிசை ஓவியங்களில் உள்ள உருவங்களைப் பகிரங்கமாக நெளிந்தோடும் ஓரிரு கோடுகள் வெட்டிப் பிரிக்கின்றன. கித்தானுக்குள் பல துண்டுப் பகுதிகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் அபிநயங்களின் முக்கிய இடமான முகமே கத்தரிக்கோலால் வெட்டப்படுவதுபோல இந்தக் கோடுகளால் வெட்டிப் பிரிக்கப்படுகின்றன. இந்த ஓவியங்கள் அவலம் என்கிற உணர்ச்சி வேதனையைத் தெரிவிக்கும் ஓர் உளவியல் தளத்தில்தான் இயங்குகின்றன. இவரது பிற ஓவியங்களைப் போன்று சமூக அவலம் என்கிற ஒரு தளத்தில் மட்டுமே உழல்வது இல்லை.

அகில இந்திய இளைஞர்களுக்கா[ன] ஓவியக் கண்காட்சியில் பிரபல ஓவியர் எம்.எஃப் ஹுசைன், த[னது] ஓவியத்தைப் பெரிதும் பாராட்டியதைப் பெருமையுட[ன்] நினைவுகூரும் புகழேந்தியின் ஓவியங்களில் காணப்படும் உடல்கள் பெரும்பாலும் கரும்பழுப்பு நிற வண்ணத்தில் அமைபவை. இதன் மூலமாக பழுப்பு நிறத் தோல்களைக் கொண்ட தமிழர்களின் அடையாளத்தை இவர் தனது ஓவியங்களில் பதிக்கிறார். உடற்கூறு இயலை நன்கு புரிந்துகொண்டவராகச் செயல்படும் இவரது ஓவியப் படைப்புகள், ஓவியனுக்கு வெளியே நடக்கும் நிகழ்வுகளினால் பாதிக்கப்படுகின்றன. ஆனால், அவரது ஓவிய வெளிப்பாடு அகவயமானதாக இருக்கிறது. எனவேதான் அவரது படைப்பு[கள்] மக்களின் பிரச்னைகளைப் பற்றி பேசினாலும், அவரது கலைமொழி, புகழேந்திக்கே உரி[ய] தனியான ஒரு மொழியாக இருக்கிறது.

– இந்தி[ரன்]

# நகை செய்யும் நங்கைகள்!



இது ஃபேஷன்களின் காலம். தலைக்கு அணியும் 'கிளிப்'பிலிருந்து கால் செருப்பு வரை நாளுக்கு நாள் மாறி வரும் நாகரிகங்களை மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். அதிலும் பெண்களிடம் இந்த ஃபேஷன் உணர்ச்சி இயற்கையிலேயே கொஞ்சம் அதிகமாய் அமைந்திருக்கிறது. நாளுக்கு நாள் மாறி வரும் அவர்கள் உடையலங்காரங்களும், அணிமணிகளுமே இதற்குச் சாட்சி! பெண்களுக்கு இருக்கும் இந்த ஃபேஷன் உணர்வோடு கொஞ்சம் படைப்புத் திறனும் சேர்ந்துவிட்டால்...

இந்த இரண்டு திறமைகளின் கலவையை நாகரிக நகைகளாகக் காண முடிந்தது, பிரிட்டிஷ் கவுன்சில் சமீபத்தில் ஏற்பாடு செய்த கண்காட்சியில். நகைகள் என்றாலே விலைமதிப்புமிக்க தங்கம், வெள்ளி மற்றும் வைரத்தால் இழைக்கப்பட்டவைதான் என்ற எண்ணத்தைத் தகர்த்து எறிந்திருக்கிறார்கள் இவற்றை உருவாக்கியவர்கள். அலுமினியம், இரும்பு, பிளாஸ்டிக், மரம், பேப்பர்மாஷ், பறவையின் இறகு மற்றும் துணி போன்றவைதான் இந்த ஃபேஷன் நகைகளை உருவாக்கத் தேவைப்பட்ட மூலப்பொருட்கள். கூடுதலாக வெள்ளியையும் சிலர் உபயோகிப்பதுண்டு. பிரிட்டனில் இதுபோல் புது நகை ஃபேஷனை உருவாக்கியிருப்பவர்கள் அனைவருமே பெண்கள்! அதிலும் முப்பது வயதுக்குக் குறைவான இளம் பெண்கள் என்றால் இன்னும் ஆச்சரியமாக இருக்கும்.

''இளம் பெண்களாக இருப்பதால் இளைய தலைமுறையினரின் விருப்பங்களைச் சுலபமாய் வெளிக்கொணர முடிகிறது'' என்[று] சொல்கிறார்கள் இந்த ஃபேஷன் படைப்பாளிகள்.

இவர்களது ஃபேஷன் நகைகள்தான் இன்று பிரிட்டனில் மிகப் பிரபலம். அவை வெறும் நகைகளாக மட்டுமே இல்லாமல் நுட்பமான ஒரு கலைப் படைப்பாகவும் இருப்பது அதை வாங்கி அணியும் இளம் பெண்களை இன்னும் சந்தோஷப்படுத்துகிறது.

இந்த நகைகளில் உபயோகிக்கப்படும் உலோகங்கள் நவீனத் தொழில்நுட்பங்கள் மூல[ம்] லேசர் கட்டிங் முறையில் வெட்டி உருவாக்கப்படுகின்றன. இந்தப் புதுவிதக் கலைப் படைப்பையும் அதன் தொழில்நுட்பத்தையும் இந்தியாவில் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு சென்னையில் கலைஞர்களுக்கான ஒரு பயிற்சி முகாமை ஃபேஷன் நகை படைப்பாளிகளில் ஒருவரான ஜான் ஆடத்தைக் கொண்டு நடத்தினார்கள், பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்தவர்கள்.

''கலாசாரத்தைப் பரிமாறிக் கொள்ளும்விதத்தில்தான் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகிறது. விற்பனை செய்யும் நோக்கம் எங்களுக்கு இல்லை'' என்று சொல்கிறார், கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்த பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த சாண்டர்சன்.

இனி வெகு விரைவிலேயே நம் ஊர்ப் பெண்கள் உடம்பில் அக்ரிலிக் வளையல்களும், மர நெக்லஸ்களும், இறகு ப்ரூச்சுகளு[ம்] அலங்கரிக்கக்கூடும்.

– லோகநாய[கி]